## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.85/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி (எ) தேவி | மதம் | : இந்து |
| க/பெ | : கருணாகரன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : காவனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : அரக்கோணம் |

**19.01.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

24. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 21 பட்டாவில் என் தாத்தா பெயரான தோட்டி சாமய்யா என்ற வடக்கய்யா என்ற பெயர்தான் உள்ளது என்றாலும் என் தகப்பனார் பெயர் இல்லை என்றாலும் ஆமாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ஆனது 1974ல் என் அப்பா பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம் என்றால் சரிதான். ஆனால் 1945க்கு முன்பு எங்கள் பெயரில்தான் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 21 பட்டாவில் என் தாத்தா பெயரான தோட்டி சாமய்யா என்ற வடக்கய்யா பெயருக்கு 1953ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 பட்டா பாஸ்புத்தகம் 1974ல் சித்திரை, கொள்ளாபுரி இருவரும் உயிருடன் இல்லாத போது வட்டாட்சியர் அலுவலகத்தில் முறையான விசாரணை இல்லாமல் தவறுதலாக கொடுக்கப்பட்ட பட்டா என்றால் சரியல்ல.

25. துரை மற்றும் துரைராஜ் ஆகியோர் சித்திரையின் வாரிசுகள் என்றாலும் ஆறுமுகம் கொள்ளாபுரியின் வாரிசு என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 21 பட்டாவில் என் தாத்தா பெயரான தோட்டி சாமய்யா என்ற வடக்கய்யா பெயரில் பட்டா இருப்பதால் சித்திரை மற்றும்

கொள்ளாபுரியின் வாரிசுகளுக்கும் அந்த சொத்தில் பாகம் உள்ளது என்றாலும் சரியல்ல. அது என் அப்பாவிற்கு மட்டும் வந்த சொத்தாகும்.

(மறு விசாரணை இல்லை)